**OS.No.160/2020 D.W.1-இளங்கோவன் 18.03.2026**

<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>

நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி. இன்று இந்த வழக்கில் கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 05.09.2024 தேதியிட்ட தாசில்தார், சோழிங்கநல்லூர் அவர்களுக்கு நான் கொடுத்த கடிதம் அசல் பி.சா.ஆ.9. 19.09.2024 தேதியிட்ட பள்ளிக்கரணை கிராம நிர்வாக அலுவலர் அறிக்கை அசல் பி.சா.ஆ.10. 26.09.2024 தேதியிட்ட பள்ளிக்கரணை வருவாய் ஆய்வாளர் அறிக்கை அசல் பி.சா.ஆ.11. 05.12.2024 தேதியிட்ட வருவாய் கோட்டாட்சியர் கிண்டி முன்பு நான் கொடுத்த கடிதம் அசல் பி.சா.ஆ.12. 04.12.2024 தேதியிட்ட 2ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் மூலம் பொது தகவல் அலுவலருக்கு அனுப்பிய கடிதம் அசல் பி.சா.ஆ.13. 07.12.2024 தேதியிட்ட பள்ளிக்கரணை கிராம நிர்வாக அலுவலர் அவர்களால் பரிந்துரை கடிதம் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.14. 24.12.2024 தேதியிட்ட கிராம நிர்வாக அலுவலர் 2ம் பிரதிவாதியின் வழக்கறிஞருக்கு வழங்கிய கடிதம் அசல் பி.சா.ஆ.15. 24.12.2024 தேதியிட்ட கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய UDR சான்று நகல் பி.சா.ஆ.16. 06.01.2025 தேதியிட்ட அய்யல் நாயுடு மற்றும் பிறர் பொன்னுசாமி அவர்களுக்கு செய்த விற்பனை பத்திர ஆவண எண.1248/1959-ன் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.17. 2ம் பிரதிவாதியின் பெயரிலுள்ள மின்சார இணைப்பு சேவை அட்டை பி.சா.ஆ.18. 07.07.2025 தேதியிட்ட போலி ஆவணத்திற்கு எதிராக 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த உறுதி கொள்ளுதல் வழக்கு சான்றிட்ட நகல் பி.சா.ஆ.19. 14.11.2024 தேதியிட்ட பொது தகவல் உாமை கோரும் மனு மாவட்ட பதிவாளா் அலுவலகத்திற்கு 2ம் பிரதிவாதியின் வழக்கறிஞா் மூலமாக அனுப்பியது அசல் பி.சா.ஆ.20. 18.11.2024 தேதியிட்ட அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் பி.சா.ஆ.21. 30.12.2024 தேதியிட்ட 2ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் அனுப்பிய பொது தகவல் அலுவலரின் பதில் அசல் பி.சா.ஆ.22.

தாவா தள்ளுபடி ஆக வேண்டுகிறேன்.

(குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)